# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2191/26 - 2020 සැප්තැම්බර් මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.09.03

*2191/26 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 06 மாத காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கட்டளை இடப்பட்டு 2020.03.07 ஆந் திகதிய 2165/ 73 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டவை, 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுமாறு இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, செத்தெம்பர் 03.*

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | |
| 1 | 03.02 | | மீன், புதியது அல்லது குளிரூட்டப்பட்டவை தலைப்பு 03.04 இன் கீழ் தரப்பட்ட முள்ளற்ற துண்டுகளையும் மீன் இறைச்சியையும் தவிர்ந்தவை | 10% அல்லது கிலோ கிராமிற்கு ரூ. 150.00 இரண்டில் எது கூடியதோ அந்த அறவீடு |
| | 03.03 | | மீன், குளிரால் உறையச் செய்யப்பட்டவை தலைப்பு 03.04 இன் கீழ் முள்ளற்ற துண்டுகள் மற்றும் பிற மீன் இறைச்சி நீங்கலாக (குறியீடு 0303.54 இன் கீழ் வரும் மெகரல் மீன் மற்றும் 0303.55 இன் கீழ் வரும் ஜெக் மற்றும் ஹோஸ் மெகரல் - Trachurus spp./மீன் தவிர்ந்தவை) | 10% அல்லது கிலோ கிராமிற்கு ரூ. 150.00 இரண்டில் எது கூடியதோ அந்த அறவீடு |
| 2 | 03.03 | 0303.54 | மெகரல் எனும் மீன் வகை (ஸ்கொம்பர் ஸ்கொம்றஸ், ஸ்கொம்பர் அவுஸ்ராலாசியஸ், ஸ்கொம்பர் ஜபோநிகஸ்) | கிலோ கிராமிற்கு ரூபா 6.00 |
| | | 0303.55 | ஜெக் மற்றும் ஹோஸ் மெகரல் - Trachurus spp./ | கிலோ கிராமிற்கு ரூபா 6.00 |
| 3 | 07.13 | | கறுப்பு உழுந்து: | |
| | | 0713.31.22 | கோதுள்ளவை, உடைத்தது அல்லது உடைக்காதவை | கிலோ கிராமிற்கு ரூபா 300.00 |
| | | 0713.31.29 | பிற | கிலோ கிராமிற்கு ரூபா 200.00 |
| 4 | | 0713.35.90 | பிற - கௌபி | கிலோ கிராமிற்கு ரூபா 70.00 |
| 5 | 10.08 | 1008.21.10 | விதை - குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) | கிலோ கிராமிற்கு ரூபா 70.00 |
| | | 1008.21.90 | விதைகள் - பிற (தினை) | கிலோ கிராமிற்கு ரூபா 70.00 |
| | | 1008.29.10 | பிற - குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) | கிலோ கிராமிற்கு ரூபா 70.00 |
| | | 1008.29.90 | பிற (தினை) | கிலோ கிராமிற்கு ரூபா 70.00 |

09-447

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.